## ஆறும் நீரும்

**ஆறாக ஆசை:-**

ஆற்றின் அழகை பாடாத அருந்தமிழ் கவிஞர்கள் இல்லை. அது பிரமிக்கச் செய்கின்றது. “ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்ற பழமொழி நாம் அறிந்ததே. வாழ்க்கையே ஒரு ஆற்றைப்போலத்தான் என்று கனியன் பூங்குன்றனார் கூறியுள்ளார். அதை உணர ஆசைப்படுகின்றோம். அதுவே ஆறாக ஆசை, அதுவும், ஆறாத ஆசை! ஆறும் நீரும் என்கின்ற இக்கட்டுரை, வழக்கத்திலிருந்து சற்றே மாறுபட்ட பயணக் கட்டுரை. இக்கட்டுரையில் ஆரம்பிக்கும்பொழுது ஒரு காவிரி ஆற்றை நோக்கிய பயணம் இருக்கும். அதில் இடையிடையே கற்பனை கலந்த மருத்துவ சிகிச்சை குறித்த கதை ஒன்று சேர்க்கப்பட்டு உள்ளது. இரண்டுமே உண்மைக் கதை இல்லை. கற்பனையானதே. உண்மை போல தோன்றினால் அது கற்பனையின் வெற்றியே. இலக்கியச் சுவைக்காக மட்டுமே இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொண்டு ஆற்றில் நீந்துவதை தொடர்கிறோம்…

**ஆற்றின் போக்கு:-**

சென்னை வாழ் வாழ்க்கையிலிருந்து காரணம் ஏதுமின்றி காரணாம்பாளையம் செல்வோம் என்று நமக்கு தெரியாது. காரணாம் பாளையம்… 17.09.2017… அந்த தேதியில் அந்த ஊரில் இருப்போம் என்பது கொஞ்ச நாட்களுக்கு முன்பு யாராவது சொல்லி இருந்தால் நகைச்சுவையாக இருந்திருக்கும். நிஜத்தில் எந்த நாளில் எந்த ஊரில் இருப்போம் என்பது யாருக்கும் தெரிவதில்லை. புதுப்புது செய்திகள் நமக்கு திடீரென தெரிய வருகின்றன. இப்படித்தான் நம் நண்பர் வான்முகில் உடைய தந்தைக்கு பெரைட்டல் பகுதியில் மூளையில் கட்டி ஒன்று இருப்பது திடீரென ஒரு அதிகாலையில் கண்டறியப்பட்டது. அது அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த கண்டுபிடிப்பு. அந்த சமயத்தில் மருத்துவமனை பதிவு ஆவணங்களை படித்தோம். அதிலுள்ள ஆங்கில வாசகங்களில் சுயநினைவோடும் குழப்பத்திலும் இருக்கிறார் என்று எழுதப்பட்டு இருந்தது. குழப்பம் என்பது என்ன? என்று கலந்துரையாடல் வளர்ந்தது. உடன் மருத்துவம் படித்த நண்பர் இருந்தார். அறிவுச்செல்வன் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் பத்தாண்டுகளுக்கு முன்பு மருத்துவப்படிப்பை தவமாக மேற்கொண்டவர். தான்

ஒரு நடமாடும், பெயருக்குரிய, உதாரணமாக நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் வலம் வருபவர். நண்பர் மருத்துவர் அறிவுச் செல்வனுக்கு அறிமுகம் கொடுக்கவே தனியாக ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றாலும் சூழ்நிலையின் தீவிரம் கருதி சூளகிரி அருகேயுள்ள பாலகொண்டராயன துர்கம் மலைமீது ஏறிய பொழுது சக மலையேற்றப் பயணி அங்கயற்கண்ணி அவர்கள் மயங்கி விழுந்தபொழுது… இது தான்… அப்பொழுதுதான்… சின்கோபல் ஷாக்… (Syncopal shock) இரத்தச் சுற்றோட்ட அளவு குறைவதால் ஏற்படும் அதிர்ச்சி என்கின்ற தொழில்நுட்பச்சொல்லை பரிட்சயப்படுத்தி வைத்தார் அறிவுச்செல்வன். அத்தோடன்றி பதட்டப்பட வேண்டாம் என்று கைகால்களை சூடுபறக்கத் தேய்த்து, தரையில் சாய்வாக படுக்கச்செய்து… தரையில்… செய்து… அதன்பின் கைகால்களை என வரவேண்டும். சற்று கண்களை திறந்தவுடன் அங்கயற்கண்ணியை மீதிமலையும் நடந்து இறங்கி கடக்க வைத்த அற்புதச் செல்வன் ஆபத்பாந்தவன் இந்த மருத்துவர். இப்படி நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் சின்னச்சின்ன அறிமுகக் கதைகள் சொல்லுமளவு நம் வாழ்க்கை ஆறு கொப்பளித்துக் கொண்டு அதன் போக்கில் போய்க்கொண்டிருக்கின்றது.

இக்கட்டுரையில் காரணாம் பாளையத்திற்கு நண்பர் அறிவுச்செல்வனை அழைத்தபொழுது விட்டுவிட்டு அதன்பின்னர் காரணமின்றி அழைத்துச் செல்லவில்லையே என்று அன்புக்கோபம் காட்டினார்… அவரது ஜிம் அறிவுரைகள் மூலமாக உடற்பயிற்ச்சிக்கு உதாரணம் காட்டினார்… இப்படி பல செய்திகளை சொல்லவேண்டும் என்றாலும்… இந்த நடமாடும் உண்ணத்தேவையில்லாத, உணரத்தேவைப்படுகின்ற ஊக்க மருந்தை விட்டு… நம் கதைக்குள் செல்வோம்…

**நரம்புச் செயலியல் மற்றும் நரம்பு அறுவைசிகிச்சை:-**

வான்முகில் அவருடைய தந்தையின் பெயர் சொற்கோ. சொற்கோ அவர்களின் பாத்திரப்படைப்பு இன்னும் சற்றுத் தள்ளி காட்டப்படும். இங்கே அவரது மருத்துவப் பரிசோதனையின் ஆரம்ப நிலையை எழுதியிருக்கிறோம். நியூரேபிஸிஷியன்கள் இப்படி தங்களது ஆரம்ப முதல்கட்ட விவரங்களை குறிக்கின்றனர். தான் எங்க இருக்கிறோம், தனது பெயர் என்ன? இன்றைய நாள் என்ன போன்ற அடிப்படை விவரங்களை மூளை தனது நினைவு சேமிப்பிலிருந்து உடனுக்குடன் எடுத்து தரவில்லை… என்கின்ற பட்சத்தில் குழப்பத்தில்… அதாவது ஒருங்கிணைப்பு இல்லாத நிலையில் இருக்கிறோம் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள். அந்த நிலை ஒரு மோன நிலை என்று

மூளையில் காணும் கட்டி கண்டறியப்படாத நிலையில் கருதலாம். ஆனால் சாதாரண சி.டி. ஊடுகதிர் தேடல் பதிவிலும், அடர்த்தி அல்லது பண்பு வேறுபடுத்தி அறியும் ‘கான்ட்ராஸ்ட்’ (Contrast) ஊடுகதிர் நிழல்படத்திலும் மூளையின் பின்பாகத்தில் ஒரு ஆரஞ்சுப்பழ அளவிற்கான கட்டி இருப்பது நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன், ‘உள்ளங்கை நெல்லிக்கனியென’ தெரியவந்தது எங்கள் அனைவர் மனதிலும் ஒரு பெரிய அழுத்தத்தை கொடுத்துக்கொண்டே இருந்தது.

சொற்கோ அவர்கள், எழுபது வயதை தாண்டியிருக்கிறார். பூரண ஆரோக்கியமாக. அவர், “எனக்கு அறுவை சிகிச்சை செய்துவிடப் போகிறீர்கள்... வேண்டவே, வேண்டாம்...” என்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கலக்கத்துடன் அறிவுறுத்திக்கொண்டே இருந்தார். சிறு குழந்தை போல காணப்பட்டார். அறுவை சிகிச்சை தவிர வேறு வழி இருப்பதற்கான சாத்தியக்கூறுகளை மருத்துவர்களால் மிக குறைவாகவே கண்டறிய முடிந்தது. மூக்கின் வழியாக எதாவது நுண்குழாய் செலுத்தி துளையிட்டு அந்த கட்டுப்பாடின்றி வளர்ந்துள்ள கட்டியினை எடுத்துவிட இயலுமா? எனில் அதற்கான வாய்ப்பு நெற்றிப்பகுதியில் இருக்கின்ற கட்டிகள் என்றால் அகற்ற முடியும். ஆனால் பின்மூளையில் வளரும் இந்தக்கட்டியை மண்டை ஓட்டை பிரித்துத்தான் அணுக முடியும் என்று பேச்சு வளர்ந்தது. சொற்கோ அவர்கள் மிகவும் ஆரோக்கியமாக இருந்திருக்கிறார். இரண்டு நாட்கள் முன்பு, வழக்கமான சுற்றுப்பயணத்தில், அமெரிக்காவில் இருந்தபொழுது சற்றே தலைவலி, கொஞ்சம் ஞாபக குழப்பம் மற்றும் சிறு சிறு கைகால் இயக்க குளறுபடிகள் தோன்றியிருக்கின்றன. அந்த வயதிற்கான சாதாரண நிகழ்வுகள் என்று விடுபட்டுப்போயிருக்கலாம். இருந்தாலும் ஒரு பரிசோதனை செய்து பார்த்துவிடலாம் என்று மருத்துவமனையை அனுகியபொழுதுதான் மேற்கண்ட சிக்கல் தெரிய வருகின்றது. வாழ்க்கை என்பது என்ன? வெறும் நினைவுகள் தானே?

**வழியும் வலியும் அறியா மூளை:-**

தான் யாரென மறந்து போய்விடில் பிறகு வாழ்வில் என்ன மீதம் இருக்கும்? என்பது போன்ற தத்துவ நினைவுகள் அந்த நவீன மருத்துவமனையின் விதவிதமான கருவிகளுக்கு இடையே நினைவில் வந்து போயின. “மூளை செல்களுக்கு உணர்ச்சி நரம்புகள் இல்லாததால் அது வெட்டி எடுக்கப்படும்பொழுது வலியை நாம் உணர்வதில்லை”

என்கின்ற மருத்துவரின் குரல் நம்மை கற்பனை உலகத்திலிருந்து நனவுலகத்திற்கு அழைத்து வந்தது. சில நேரங்களில் தேவையான அளவும் வடிவமும் உள்ள மண்டை ஓட்டு துண்டை வெட்டி எடுத்து குளிர்பதன பெட்டியில் வைத்துவிட்டு... உள்ளே உள்ள மூளையின் நோய்வாய்ப்பட்ட புற்றுநோய் செல்களை 'பயாப்ஸி' செய்து எடுத்து அந்த செல்களின் "பேதாலஜிக்கல் சேஞ்சஸ்" (Pathological Changes) என்ன என்ன என்று பார்க்க கொடுத்துவிடுவார்களாம். அந்த பரிசோதனை எல்லாம் முடிவுற்ற பிறகு அதற்குரிய மருத்துவ முறைகளை முடிவு செய்து புற்றுநோய்ப் பகுதியை முழுவதுமாகவோ... அல்லது சிறிது சிறிதாகவோ ஒரே சமயத்திலோ அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியிலோ அதனை வெட்டியோ, உறுஞ்சியோ எடுக்க வேண்டும் என்று முடிவு செய்வார்கள். இலத்தீன் மொழியில் இருந்து ஆங்கில மொழிக்கு வந்து தமிழ்மொழிக்குள் நிறம்மாறி இறங்கிக்கொண்டிருக்கின்ற அறிவியல் கலைச்சொற்களை இயன்ற அளவு தவிர்க்கலாம் என்றுதான் முயற்சித்தோம். ஆனாலும் அவை விடுவதாக இல்லை.

**பாயும் ஆறு:-**

தமிழ்முறை ஆயுர்வேதம், சித்தமருத்துவம் முதலியவற்றில் இந்நோயை எப்படி அணுகுவார்கள்? எதாவது இலைதழைகளை அரைத்துக் குடிக்கக் கொடுத்தால் தந்தையின் மூளைக்கட்டி சட்டென மாயமாக கரைந்து மறைந்து போய்விடக்கூடாதா? என்று சட்டென ஒரு கற்பனை நம்பிக்கைக் கீற்று மின்னிச்சென்றது? அதற்கான வாய்ப்பு இருப்பதாக ஆராயக்கூடிய மனநிலை நமக்கு மட்டுமே (ஏன்?) இருப்பதாக தோன்றியது. இதைப்பற்றி பேசுகிற தைரியம் (வருமா?) வரவழைக்க எத்தனிக்க, தயக்கமாக இருந்தது. செவிலியர்கள் அவசரமாக, இங்குமங்கும் நடைபோட்டவண்ணம், கண்டிப்பை கண்களிலும் கனிவை சொற்களிலும், கறாரை தொனியிலும் கலந்து கருத்து பரிமாற்றம் செய்த வண்ணம் இருந்தனர். அவர்களை அணுகி, பேசினால், அறிவுத் தகவல்கள் பெறலாம்... ஆனால் அவை நம்பிக்கை தருமா... அச்சமூட்டுமா... என்று யோசிக்கும் பொழுதே... அவர்கள் அடுத்த வேலையாக கடந்து சென்றுவிடுகிறார்கள். இந்த சூழ்நிலையில் ஆறு... போல வாழ்வு ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி ஓடுவதாகவே தோன்றியது...

எண்ணற்ற நோயாளிகளை ஆய்வு செய்த அந்த மிகப்பெரிய மருத்துவமனையின், நியூரோபேதாலஜி, நியூரோ

பிஸியாலஜி, அனத்தீஷியா, என்று வெவ்வேறு உயர்படிப்பு படித்த மேதைகளின் சொற்களை இயன்றளவு விரைவாக நம் நண்பர் புரிந்துகொண்டு பதில்தரவேண்டும் என்று சூழ்நிலையால் நிர்பந்திக்கப்பட்டார். ஐ.சி.யு உடைய கட்டணம் கண்களை கட்டும் அளவில் இருந்தது. இரவு ஏழு மணிக்கு வந்த மருத்துவமனை... வந்து சரி... ஒர ு அரைமணி நேரத்தில் திரும்ப வீட்டிற்கு போய் சாப்பிட்டுவிட்டு தூங்கலாம் என்று நினைத்திருந்த வான்முகிலுக்கு... அடுக்கடுக்கான அவசர பரிசோதனைகள் கதிர்வீச்சு ஆய்வக நடைமுறைகள் அதனுடைய பரிசோதனை முடிவுகள்... என பதினோரு மணி, இரண்டரை மணிக்கு சி.டி ஸ்கேன் ரிசல்ட்... என்று வந்துகொண்டே இருந்தது. கிட்டத்தட்ட நான்கு மணிக்கு அந்த சற்றே பெரிய வடிவ எலுமிச்சம் பழம்போல் அமைந்திருந்த கட்டி... நம் நண்பர் மனதை விசுவரூபமெடுத்து ஆக்கிரமித்த பொழுது... இரவின் உறக்கமின்மை, தந்தையின் நோய்த்தாக்கம் ஆகியவை கண்களையும் இதயத்தையும் ஒருசேர பாரமாக்க... ஒரு பொறியாளராக கல்வி கற்றிருந்த நம் நண்பர் வான்முகில் அந்த ஒரே வேகமான இரவில்... ‘‘எழுதப்படிக்கத் தெரியாதவன் மாதிரி... என்நிலைமை ஆகிடுச்சுங்க சார், எல்லா லத்தின், கிரிக் டெக்னிகல் டெர்ம்ஸ்ஸும் உடனுக்குடன் நமக்கு புரிஞ்சி தெரிஞ்சி பதில் சொல்லணும்னு எதிர்பார்க்கறாங்க... எல்லா பார்ஃம்களும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றது. அதில் எழுதப்பட்டிருக்கின்ற விவரங்களும், மருந்துகளும் சான்றளிப்புக்களும்... நமக்க ு ....உடனே ‘‘கூக்குள் டாக்டரை’’ படிச்சுத் தெரிஞ்சுக்க முயற்சி செய்ய வைக்குது. ஆனாலும் பதட்டத்துல எவ்வளவு சார்... முடியும்... நமக்கே இப்படின்னா... படிக்காம... இங்க வருகின்றவங்க எப்படி புரிஞ்சுப்பாங்க... ஆனாலும்... நம்ம மருத்துவர்கள் இயன்ற அளவு விளக்கமாகவும்... மெதுவாகவும் சொல்ல முயற்சி செய்யறாங்க சார்’’...

**ஆபத்பாந்தவன் அழகிய மருத்துவன்:-**

மேற்கண்ட சொற்களில் நண்பர் வான்முகில் அந்த சூழ்நிலையின் கனபரிமாணத்தை புரியவைத்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது அந்த நாளின் மாலை ஆறு-ஏழு மணி இருக்கும். முதல் நாள் இரவு, காலை 4 முதல் ஆறு வரை இரண்டு மணி நேரம் மட்டுமே... அதுவும் உடனிருந்த மருத்துவ நண்பர் அறிவுச் செல்வனுடன் காரிலேயே கண்மூடி எழுந்ததன் அயர்ச்சியுடன் பேசிக்கொண்டு இருந்தார். அந்த ஒருநாளுக்கும் குறைவான பொழுது அவர்களது குடும்ப மற்றும் நட்பு வட்டாரத்தில் ஒரு அமைதியான பிரளயத்தை

உருவாக்கிவிட்டிருந்தது. யாருடைய முகமும் அழுகையோடில்லை. அது நோயாளியை இன்னும் பதட்டமாக்கும் என்பதை உணர்ந்து புன்னகையோடு (கடும் முயற்சி செய்து வரவழைக்கின்றனர்) பேசிக்கொண்டு இருந்தனர். நண்பரின் அப்பாவும், தன்மகன், தான் கேட்டுக்கொண்டதை ஏற்றுக்கொண்டு தனக்கு அறுவைச்சிகிச்சை செய்வதை தடுத்துவிடுவான் என்கின்ற நம்பிக்கையோடு புன்னகைத்துக் கொண்டுதான் பேசினார். எழுபது வயதுவரை மிகவும் ஆரோக்கியமாக வாழ்ந்த பெரியவர் அவர். பார்க்க ஐம்பது வயது மதிக்கத் தக்கவர். தனது எழுபதாவது வயதிலும் ஜாக்கிங் சென்றுவந்து ஆரோக்கியம் பேணுபவர் என்பது அவரது தொப்பை இல்லாத பிடித்தமான உடல்வாகில் தெரிந்தது. இப்பொழுதுதான் வழுக்கையும் நரையும் விழ தொடங்கி இருந்தது. அவரது முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக புன்னகை குறைந்து... இறுக்கம் தவழ தொடங்கிய பொழுது... தளர்வாக தனது படுக்கையில் படுத்து... உறங்க தொடங்கினார். நம்மைப்போன்ற உடன் இருந்தவர்களின் ஒரே நம்பிக்கை ஒளியாக மருத்துவ நண்பர் அறிவுச்செல்வன் இருந்தார். அவரது அறிவுசார்ந்த எடுத்துக்காட்டுகளும், உணர்வுசார்ந்த உடனிருப்பும், இதயபூர்வமான நம்பிக்கையும் மட்டுமே எங்களுக்கு தெம்பு ஊட்டியது.

**மூட**ு**(Mood) தரும் முடிவுகள்:-**

மருத்துவர்களும் மகனும் எப்படியும் அவரை அறுவை சிகிச்சைக்கு சம்மதிக்க வைத்துவிட இயலும்? என்று நம்பிக்கையுடன் இருந்தனர். சொற்கோ, அவரது மூளை தெளிவாக இயங்காத சூழ்நிலையில் அறுவை சிகிச்சை வேண்டாம் என்று கூறும் அவரது கருத்து எவ்வளவு சிந்தித்து எடுக்கப்பட்டது? என்று தோன்றியது? இத்தகைய அதிதீவிர சிகிச்சை குறித்த முடிவு ஒருபுறம் இருக்கட்டும்... நாம் ஒவ்வொரு நாளும் எடுக்கும் பல முடிவுகள் மூளையின் எவ்வளவு ஆழம்வரை சிந்தித்து எடுக்கப்படுகின்றன? என்று யோசனை செய்யத் தோன்றியது. பல சமயங்களில் அந்தந்த நேரத்து மனநிலைக்க ு(Mood) ஏற்ப நாம் சட்டென முடிவெடுத்துவிடுகின்றோம். வார்த்தைகளை சிந்திக்காமல் சிந்திவிடுகின்றோம். காலதாமதமாவது மட்டுமே சரியான முடிவுக்கு உத்திரவாதமில்லை. களைத்துப்போகிறவரை சிந்திப்பது பிறகு பிழையானதொரு முடிவு எடுப்பது என்பதும் தவிர்க்க வேண்டுவதே... ஆழ்ந்து சிந்தித்து, நல்ல

புள்ளிவிவரங்களை ஆராய்ந்து, விரைவாக எடுக்கப்படும் முடிவே திருப்தியான, சிறந்த முடிவுகளாக இருக்கும். திருப்தியான முடிவெல்லாம் சிறந்த முடிவல்ல! சிறந்த முடிவுகளெல்லாம், முழுதிருப்தி தருவதில்லை! ஆறு சுழல்போல. இது கொஞ்சம் சுற்றி வருவதே!

**படம் தந்த பாடம்:-**

கிராமத்தில் பல்லாங்குழி பெட்டிபோல வரிசை வரிசையாக அடுக்கிய கருப்புவெள்ளை படங்களில் அனுப்பிய வாட்ஸ்அப் குறுஞ்செய்தியில் மூளையின் குறுக்குவெட்டு, நீள்வெட்டு படங்களில் உட்புற தோற்றத்தை பார்க்க முடிந்தது. பாதாம் கொட்டை போல சல்சி, கைரி எனப்படும் மேடு பள்ளங்களோடு அச்சு அசலாக அப்பாவின் மூளை அக்குவேறு, ஆணிவேறாக படம்பிடிக்கப்பட்டிருந்தது. வலதுபக்க மூளையில் இருந்த கட்டியின் காரணமாக மூளையின் பிறபகுதிகள் ஒருபக்கமாக தள்ளப்பட்டு… அதன் காரணமாக நீர் கோர்க்க ஆரம்பித்திருந்தது அதை சீடி ஸ்கேன் (CT Scan) படம் சற்றே மங்கலான நிறத்தில் காட்டியிருந்தது. அதில் இருக்கிற இன்ஃப்ளமேட்டரி (Inflammatory) பகுதிதான், அதாவது உடல்தடுப்பாற்றல் மூலம் நடத்தப்படும் போராட்டகளப்பகுதிதான் நண்பரின் தந்தையாரின் ஒருங்கிணைப்புக்குறைவிற்கு காரணம் என்று தோன்றுகிறது என்று டாக்டர்கள் கூறினார்கள்.

**உள்ளேயா? வேளியேயா?:-**

மெனிஞ்சியோமா என்பது மூளையை சுற்றியுள்ள மூன்றடுக்கு மெனிஞ்சஸ் எனப்படும் உறையிலிருந்து உருவாகும் கட்டி, கிளையோமா என்பது மூளைசெல்களிலேயே உருவாகும் கட்டி… இவற்றில், கட்டி மூளையின் சுற்றுச் சுவருடன் இணைந்துள்ள இடத்தை படத்தில் பார்த்து மருத்துவ நண்பர் இக்கட்டி முதல்வகையை சார்ந்தது எனவே சுற்றுச்சுவர் பிரச்சனைதான் ஏற்பட்டுள்ளது. உள்ளே உள்ள முக்கிய மூளைசெல்கள் நன்றாகவே இருக்கும் என்று நம்புவோம் என்றார்.

பொதுவாக நாம் சோகமான கட்டுரைகள் எதையும் எழுதுவதில்லை. சோக கதைகளாக கருதப்படும் பல நிகழ்வுகள் பிற்காலங்களில் நகைச்சுவையாக மாறிய அனுபவங்கள் நிறைய நிறைய உண்டு. ஆனால் இம்முறை இம்மருத்துவமனை நிகழ்வு மிகச் சட்டென ஏற்பட்டுவிட்டது. அலுவலகத்திலிருந்து தகவல் பெற்றதும் சென்ற நம்மால்… மருத்துவமனையிலிருந்து சட்டென கிளம்ப கூட தோன்றவில்லை, அங்கிருந்து உதவிகள் புரியலாம் என்றே தோன்றியது.

அடுத்தநாள் நாகர்கோவில் பயணிக்க வேண்டிய சூழல்... பயணத்திட்டத்தை கேன்சல் செய்துவிடலாமா? என்று யோசனை தோன்றியது! உள்ளே இருப்பதா? வெளியே போவதா? மூளையில் கண்ட புற்று நோய்க்கட்டி அறுவைச் சிகிச்சை எவ்வாறு வெற்றிகரமாக நடந்து மிகுந்த பூரண உடல்நலமுடன் நண்பரின் தந்தை வீட்டிற்கு வந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தார் என்பதை விவரமாக எழுத வேண்டும்... அல்லது அவரது தந்தை கோரியதற்கேற்ப, சிறப்பு மருத்துவ முறைமூலம் அறுவை சிகிச்சையின்றி எப்படி புற்றுக் கட்டி கரைந்து போனது என்பது பற்றியும் எழுத வேண்டும். மருத்துவமனைகளை தேர்ந்தெடுப்பது குறித்தும், மருத்துவ முறைகளை தேர்ந்தெடுப்பது குறித்தும் அதிர்ஷ்டமும், சந்தர்ப்ப சூழ்நிலையுமே முடிவெடுக்கச் செய்வது குறித்து இன்னும் பல விஷயங்களை பகிர்ந்து கொள்ள தோன்றிடுகின்றது.

**பயணம் – தொடர்ச்சியா தொடக்கமா?:-**

நண்பரின் தந்தையின் சிந்தித்து தீர்வுகண்டறியும் திறன் மாறுபட்டுள்ளது அதனால் அறுவை சிகிச்சை செய்யலாம் என்னும் முடிவை அவரது நெருங்கிய உறவினர்கள் எடுக்கலாம்? என்று சட்டம் வழிவகை செய்துள்ளதா? என்பதும் நாம் தெரிந்துகொள்ள விரும்பும் கட்டுரைப் பொருளாகும். இந்நேர்வில் என்ன நிகழ்ந்தது என்பதில் எழுத்தாளரின் கற்பனை கலந்துள்ளது, இச்சூழலில் நாகர்கோவில் பயணம் தொடங்கியது. எனவே ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி நாகர்கோவில் பயண அனுபவங்களையும் இக்கட்டுரை கொண்டுவருவது இயல்பே. இச்சூழ்நிலையில் கட்டுரை தொடங்கிய இடத்திற்கு திரும்ப சென்று பார்ப்போம். அது ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகேயுள்ள காரணம்பாளையம் ஆகும் காரணம் இல்லாமல் மருத்துவமனை வழியாக கனத்த இதயத்துடன் நாம் பயணிக்கச் செய்யப்படவில்லை. மருத்துவமனை அனுபவத்திற்கு முன்பே காவிரி பயணம், ஆற்றின் அனுபவம் ஏற்பட்டுவிட்டது... ஆனால் கட்டுரையில் ஆற்றைவிட ஹாஸ்பிட்டல் அதிக இடம் பிடித்தது இயல்பானதே, சற்றுநேரம் ஆற்றைக்கண்டு திரும்ப வருவோம், வாருங்கள். காரணம்பாளையம் அருகில் கொளாநல்லி என்ற ஊரில் பொன்குழலி அம்மன் ஆலயம் உள்ளது, அதன் அருகே குட்டப்பாளையம் எனும் ஊரில் நண்பர் சென்பகராமன் வீட்டில் ஒருநாள் தங்கும் வாய்ப்பு கிடைத்தது. குட்டப்பாளையம் அருகே “பொன்னி தோற்றம்” என்று ஒரு நுழைவாயில்

அமைத்து இருந்தனர். அதற்குள் நண்பர் சென்பகம், அழைத்துச் சென்றார். "பயணம் என்பது இனிமையானது. வீட்டில் இருப்பதும் அதற்குச் சமமாக இனிமையானது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது; இருந்தாலும் இவை இரண்டையுமே நான் நேசிக்கின்றேன்', என்று ஒரு எழுத்தாளர் கூறியிருந்ததை, ரீடர்ஸ் டைஜஸ்ட் இதழில் படித்தது ஞாபகம் வந்தது.

**பொன்னி தோற்றம்:-**

"பொன்னி தோற்றம்" என்பது ஒரு நுழைவாயில் முகப்பின் (Arch) ஆர்ச் மீது எழுதப்பட்டு இருந்தது. அது வழியாக இருசக்கர வாகனத்தில் சற்றே மேடான சிறு குன்றின் மீது இலேசாக மழை தூறிக்கொண்டிருந்த, செப்டம்பர் 2017 ல், ஏறியது ஒரு அற்புதமான அனுபவம். அந்த மலைமீது ஏறி, அங்கிருந்த ஒரு தனியார் பள்ளி கட்டிடத்தின் பக்கவாட்டில் சென்றால், முன்பொரு காலத்தில் எழுத்தாளர் கல்கி அவர்களும் அவரது நண்பரும் அமர்ந்து, 'பொன்னி' நதியென புகழப்படும் காவிரி நதி வளைந்தோடி வரும் அழகை கண்டு இரசித்த, இடத்தை அடையலாம். 'பொன்னியின் செல்வன்' மிக நீளமான ஒரு காவியம். அதில் காவிரி நதியின் கண்ணைக் கவரும், கருத்தை நெகிழ்விக்கும் தோற்றம் குறித்து எழுதுவதற்கு... இந்த இடத்தில் வந்து, இப்படி ஒரு கண்கொள்ளா அழகை கண்டதும், ஒரு காரணமாக இருந்தது என்று இப்பகுதியில் வாழும் பெரியவர்கள் கூறுவார்கள் என்று நண்பர் சென்பகம் என்றழைக்கப்படும் சென்பகராமன் கூறினார்.

அங்கிருந்து காரணம்பாளையம் வரை இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது மழை தூவியது. 'ஜோடர்பாளையம்' என்ற ஊர் காரணாம்பாளைய காவிரிக் கரையின் மறுபகுதியில் அமைந்திருக்கிறது என்று நண்பர் சென்பகம் கூறினார். அந்த இடத்தில் ஒரு சிறு தடுப்பணை போல அமைத்து இருந்தனர் பொதுப்பணித்துறையினர்.

**சாதாரண சாகசங்கள்:-**

"பொன்னி தோற்றம்" இடத்திலிருந்து காவிரியை கண்டபொழுது தொன்னூற்றி ஐந்து சதவிகிதம் கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அதிலென்ன ஐந்து சதவிகித கணக்கு? என்று நீங்கள் கேட்பது கேட்கின்றது... சொல்கின்றோம்... மழை பொழிந்து இப்பொழுது அசைந்தாடி நடனமாடி வரும் காவிரி கடந்த ஒருவருடமாக நீர்குறைவால் சிக்கலில் இருந்தபொழுது தலைநரைத்துப்போன கொஞ்சம் தென்னைமரங்கள் இன்னும் தங்களுக்கு தண்ணீரை உறிஞ்சி

‘டை’ (Dye) பச்சை நிறத்தில் அடித்துக்கொள்ளாமல் இருந்ததுதான் அந்த ஐந்து சதவிகித காட்சிக் குறைக்குக் காரணம். இருசக்கர வாகனம் ஓட்டி பத்தாண்டுகள் கடந்த நிலையிலும்… சென்பகம் விடுவதாக இல்லை வாகனம் ஓட்டுவது என்றவுடன், அட்டகாசமான வேகத்தில் சென்பகராமனின் எதையும் தாங்கும் இதயத்தைக்கூட அச்சத்தில் ஆழ்த்தும் வண்ணம் (காரை (Car) மகிழ்வுந்தை) செலுத்திவந்த நண்பரின் இல்லத்தரசியின் அபாயகரமான சாதாரண சாகசம் நினைவு வருகின்றது. உடனே! இளங்கோ, என்னும் புதுக்கோட்டை ஓட்டுனர் நினைவு வருகிறது. அவர்தான் முதன்முதலில் நான்குசக்கர வாகனம் செலுத்த கற்றுக் கொடுத்தார். “ஒவ்வொரு முறை வாகன செலுத்தும் வட்டத்தை (ஸ்டியரிங், Stearing) கையில் பிடிக்கும் பொழுதும், அன்றுதான் முதன்முதலாக வாகனம் செலுத்த கற்றுக் கொள்வது போல எண்ணிக்கொண்டு அமர வேண்டும்” என்றார். ஆஹா… என்னே ஒரு கவனத்தைக் குவிக்கும் முயற்சி.

**லா - பெட்ரோஸா:-**

அண்ணியார் வாகனத்தை செலுத்திய சமயத்தில், கடவுள் எங்களது காரின் (சீறுந்தின்) பானெட்டில் (முகப்பில் – Bonnet) ல் அமர்ந்து எங்களை பாதுகாத்து சென்னையிலிருந்து சேலம் அழைத்துவந்தார் என்று கூறினோம். தி பவர் ஆஃப் பாசிட்டிவ் திங்கிங் (The Power of Positive Thinking – நேர்மறை சிந்தனையின் ஆற்றல்) என்கின்ற புத்தகத்தில் கடவுள் உங்களுடனே இருக்கின்றார் என்பதை உணர்வீராக என்று கூறியிருப்பதை வாகனம் காற்றைக்கிழித்து பயணித்த பொழுது அச்சமுற்ற சென்பகராமனை கண்டு தெரிந்து, தெரிந்து தெளிந்தோம். தமிழக சாலைகள் விபத்துக்களால் இரத்த வண்ணம் உதட்டு சாயம்போல் பூசிக்கொண்ட தோற்றம் தருபவை என்ற மட்டில் நமக்கு சற்றே மிகைப்படுத்தப்பட்ட செய்தி என்று தோன்றலாம் ஆனால் அதில் உண்மை இல்லாமல் இல்லை என்று புள்ளி விவரங்கள் தெள்ளத் தெளிவாகக் காட்டும். நமக்குத் தெரிந்த உறவினர்கள் / நண்பர்களில் சிலபலருக்கு காயம் முதல் / காலம் வரை பாதிப்புக்களை சாலைப் பயணங்கள் ஏற்படுத்தாமல் இல்லை என்கின்ற கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்வோம். இருசக்கர வாகனப்பயணம், என்றவுடன் ‘லா-பெட்ரோஸா’ நினைவு வராமல் எப்படி?

‘லா-பெட்ரோஸா’ என்றால் தெரியாதவர்களுக்கு தமிழ்நாட்டு பட்டிதொட்டியெல்லாம் கூட சினிமா கதாநாயகர்களுக்கு இணையாக டீ சர்ட்டில் (T-Shirt)

இடம்பிடித்த "சே-குவேராவை" தெரிந்து இருக்கும். எர்னெஸ்டோ செ-குவேரா… ஆரம்ப காலங்களில் தென் அமெரிக்கா கண்டத்தில் தெற்கு வடக்காக அர்ஜெண்டினா, பெரு, சிலி வழியாக இருசக்கர வாகனத்தில் (நோர்ட்டன்) Norten-make பயணித்த நினைவுகளை அவர் தனது தானியங்கி இருசக்கர வண்டி நாட்குறிப்புகள் (Motor Cycle – Diaries) என்று எழுதி உள்ளார். அவரது அந்த இருசக்கர வாகனத்துக்கு அவரே வைத்திருந்த செல்லப் பெயர்தான் "லா-பெட்ரோஸா" **(La Poderosa -"The Mighty One")** என்பது சக்திவாய்ந்த - The Powerful என்பதாகும். யமஹா – RX – 100 R வாகனம்… இதை காண்கையில் எல்லாம் கல்லூரியில் நண்பன் கணா என்கின்ற கணபதியின் வாகனத்தை ஓஸி-வாங்கி ஓட்ட எத்தனித்த (ஓட்டினோம் என்று சொல்லிவிட மனம்வரவில்லை – ஆனால் காயமின்றி தப்பினோம் – என்று காலரை தூக்கிவிட்டு சொல்லலாம்) நாட்கள் ஞாபகம் வருகின்றன. பொதுவாக வாகனங்களை நாம் பக்குவமாக பயன்படுத்த உறுதி எடுத்துக்கொள்வோம் ஆகுக.

**ஆறுமட்டுமா அழகு:-**

காவிரியாறு தன்னுடைய தாகத்தை தீர்த்த மகிழ்ச்சியில் தளும்புவதாக தோன்றியது. ஆங்காங்கே சிறுசிறு பாறைகளில் குதித்துத் துள்ளிய நீரில் இருந்து துடித்துத் துள்ளிய மீன்களை சில சிறுவர்கள் 'லபக்' என்று பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர். அப்படியொரு காட்சிப் பின்புலத்தில் வானம்பார்த்தவாறு ஒரு வாகான பாறையில் சாய்ந்து புகைப்படம் எடுத்து முகநூலில் பகிர்ந்தபொழுது நண்பர்கள் நிறையபேர்… மகிழ்ச்சியாக பின்னூட்டம் (Feedback) கொடுத்திருந்தனர். வால்டன் ஏரி அருகே தோரோ (Thoreau) சென்று வாழ்ந்த காலக்கட்டத்தின் பதிவுகளை அந்தக் காட்சிப்பதிவு அசைபோட வைத்தது காவிரி சிறு சிறு கற்குவியல்களில் பட்டு நெளிவதைப்போல நம் கட்டுரையும் நுரைத்துக்கொண்டு ஓடுவதே அழகுதான். நீல நிற உடையில் போடப்பட்டிருந்த அந்த புகைப்படத்திற்கு ஆற்றங்கரையில் நினைவோடை – ஓடுமிடம் கொடுமுடி அருகே என்று எழுதி ஆங்கில தலைப்பிட்டு இருந்தோம் அறுநூற்றை தாண்டிய நண்பர்கள் விரும்பிய (Like) புகைப்படம் நாம் செய்கின்ற இடத்தில் எல்லாம் அதை ஏற்கனவே பார்த்திருந்த நண்பர்கள் அதுகுறித்து விசாரித்த வண்ணம் முக மலர்ச்சியுடன் பேச வைத்தது. அதில் ஒரு நண்பர் "ஆறு மட்டுமா அழகு?" என்று ஒரு இருபொருள்படும் கேள்வி ஒன்றை பதிவிட்டு இருந்தார். இது பலபேரால் பார்க்கப்படும் பொழுது பல பொருள்களில்

புரிந்துகொள்ளப்படும். ஒரு சில அர்த்தங்களில் நாமும் அழகு 'வெட்கம்' வரும் வகையில் கூட புரிந்துகொள்ளலாம். ஆனால், அவர் அதை சொல்லவில்லையே. அழகு… என்பதே… சொல்லாமல் விடுகின்ற சொற்களில்தானே இருக்கின்றது? ஆங்கில கவிஞன் வோட்ஸ்வொத்தும், கீட்ஸூம், மனதில் வார்த்தை ஆறுகளை ஓடவிட்டனர். இதற்கு பதில் தரும்பொழுது அனைவரும் மேலும் 'முகம் சிவக்கும்' வண்ணமும், மேலும் முகம் மலரும் வண்ணமும், உடனே பதில் கூறும் வேகத்திலும் பதில் பதிவிட வேண்டும் என்று சற்றே மூளையை கசக்கி ஒரு பதிவிட்டோம், அது மிகவும் நன்றாக வந்திருந்தது. முகநூலை கண்டவர் சிலரே! இக்கட்டுரையை படித்துக்கொண்டு இருப்பவர்களோ பலர்… எனவே அந்த முகநூல் பதிவை எழுத்துப் பதிவாக்கும் எண்ணம் தோன்றியது.

சொற்கள் மிகுந்த கவனத்துடன் கையாளப்படவேண்டிய
வாழ்க்கைக் கட்டிடத்தைக் கட்டப் பயன்படும் கற்கள்

என்று சிந்தனை ஓடுகிறது.

''சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து''

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அவ்வாறு, ஒரு பதிலை எழுதலாம் என்கின்ற நம் முயற்சியில் இதைப்படிக்கின்ற உங்கள் மனதில் ஆற்றின் மடியில் ஒய்யாரமாய் தலைவைத்து விண்ணைத் தாண்டி விழிகளை வானெங்கும் பரப்பி சாய்ந்திருக்கும் படத்திற்கு, ''ஆறு மட்டுமா அழகு'' என்று ஒரு பதிவிட்டால்… அதைப் பதிவிட்டவருக்கும் புல்லரிக்கும் வண்ணம், என்ன பதில் எழுதலாம் என்று யோசனை செய்து சொல்லுங்கள்.

**கற்பனையே ஆறுதல், கற்பனையே மாறுதல்:-**

அதற்குள் நாம், ''மூளைப்புற்று நோய்'' என்று, நவீன மருத்துவ ஆராய்ச்சி முறைகள் வரப்பிரசாதமாக நம் கரங்களில் தவழ விட்டுள்ள ஊடுருவிப் பார்த்து கண்டறியும் தொழில்நுட்பம் மூலம்… பேரதிர்ச்சியை நமக்குக் கொடுத்த சூழ்நிலையை திரும்ப சென்று கண்டு வருவோம். அதில் மனதிற்கு அமைதியும் முடிந்தால் நிறைவும் அளிக்கும் மாற்றமோ செய்தியோ? வந்துவிடாதா?... உதாரணத்திற்கு, ஒரு கற்பனையாக… கீழ்காணும், பத்தியில் ஒரு கனவில் காணும் சம்பவத்தை பார்ப்போம்,

''இந்த சி.டி ஸ்கேன் (CT Scan) எடுக்கப்பட்டபொழுது மருத்துவக் கல்லூரி பாடபுத்தகத்தில் மூளைப்புற்று தோடர்பான மற்றொரு படக்காட்சி, தவறுதலாக உங்களுடைய உறவினரின் படக்காட்சியாக வந்துவிட்டது.

அதனால் மீண்டும் சரிபார்த்து நோயில்லாத படமாக இருக்கும் இந்தப்படந்தான் தங்களுடையது, தங்களுக்குரியது… இதை நீங்கள் மீண்டும் சரிபார்த்துக்கொள்ளலாம்,'' என்று கூறினால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என்று தோன்றியது. அப்படி நடந்தால், மருத்துவமனை நிர்வாகத்தின்மீது, ஏன் முதலிலேயே சரியாக பார்த்து கூறவில்லை, என்கிற மனஸ்தாபம் கூட வரலாம். ஆனாலும் மிகவும் மனதை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்த மிரட்சியும் கவலையும் லேசாகி மறையக் காணலாம். இப்படியொரு கற்பனையும் நமக்குத் தோன்றியது. ஆற்றின் ஓட்டத்தில் காணும் சுழல்களைப் போல சில காட்சிகள் இதுபோன்ற செய்திகளால் வருவதே வாழ்வின் இயல்பு.

**தற்செயல்:-**

தற்செயலாக மருத்துவ நண்பர் அறிவுச்செல்வன் நம்மை அலுவலகத்தில் சந்தித்திராவிட்டால் மூளைப்புற்றுநோய் குறித்த நியூரோசர்ஜிகல் அதிநுண்சிகிச்சை துறைகுறித்த இவ்வளவு ஆழமான சிந்தனை வந்திருக்காது. வயதான பெரியவர் சொற்கோ, என்கின்ற உருவகத்திற்கு பதில் மூளைப் புற்று நோயாளி சொற்கோ என்கின்ற புதுக் கோணத்தில் மதிப்பிற்குரிய நண்பரின் தந்தையை பார்க்கும் கோணம் வந்திருக்காது. அந்த மருத்துவ மனையில் இருந்து பிரிந்து கிளம்பும்பொழுது, அந்தப்பெரியவருக்கு அத்தியாவசிய தேவையாக இருப்பதும், அவருக்கு மிகவும் தேவைப்படுவதுமான, ''அறுவைச் சிகிச்சை செய்யமாட்டோம்'', – என்கின்ற ஆசுவாசத்தை நம்மால் கொடுக்க முடிந்திருக்குமா? என்கின்ற சிந்தனையோடே நாகர்கோவில், கோதையாறு, தோவாளை, திருநெல்வேலி என அலுவலக பணி நிமித்தம் பயணித்த பொழுதும்… ஒரு வாழ்ந்து பழுத்த முதியவருக்கு… அவர் நினைக்கின்ற ''அக்கறையை'' ''கவனிப்பை'' ''தெம்பை'', ''பாசத்தை'', 'அரவணைப்பை' அளிப்பதற்கு பதிலாக, சிகிச்சையை மட்டுமே அளிக்க நாமும் மௌன ஒப்புதல் அளித்ததாக தோன்றும் மனநிலையுடனே இருந்திருக்க மாட்டோம். இந்த பாராகிராஃபின் முதல் சொல்லை பாருங்கள், அது 'தற்செயலாக' என்றே தொடங்குகிறது. அதற்கான சந்திப்புத்திட்டமிடல் எங்களுக்குள் நிகழவில்லை. இதைப்படிக்கும், திட்டமிடல் உங்களிடம் நிகழவில்லை. எதேச்சையாக இந்த புத்தகத்தை நீங்கள் படித்து நம் சொற்களை, சிந்தனையை பகிர்ந்துகொண்டிருக்கக்கூடும்… அனைத்துமே தற்செயலாகவே நிகழ்கின்றன. இது குறித்த அற்புதமான விளக்கங்களை, இதே வினாடி, அதே வினாடி

மற்றும் அடுத்த வினாடி என்கின்ற புத்தகங்களில் நாகூர் ரூமி சார் அருமையாக எழுதியிருக்கின்றார்.

**சாதல் புதிதன்றே:-**

இப்பொழுதெல்லாம், புத்தகங்கள் காணகிடைக்கும் பொழுது அவை மிகப்பெரும் சிந்தனைக்கான சந்தர்பத்திலேயே இயற்கையால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கருத வைக்கின்றது. இல்லையென்றால் "அதுல் காவண்டே" அவர்களது "அழிபவராக இருத்தல்" (பீயிங் மார்ட்டல் – Being Mortal) என்கின்ற பென்குயின் பிரசூரத்தால் வெளியிடப்பட்ட, ஆங்கில புத்தகம் நம் கையில் இந்த பின்னணியில் இவ்வளவு நெரிசலான பயணத்தில் கிடைத்திருக்காது, அப்படி கிடைத்திருந்தாலும், அதை சொந்த ஊரில், வயதான அப்பா அம்மாவின் அரவணைப்பில், அவர்களின் அற்புதமான சமையலில் மகிழ்ந்து சொக்கிப் போயிருக்கின்ற சந்தோஷ மிதப்பில்... மணிக் கணக்கில் படித்திருக்கவும் மாட்டோம்... அற்புதமான... வாழ்கின்ற ஒவ்வொருவரும்... வைத்தியம் தருகின்ற வைத்தியம் பெறுகின்ற ஒவ்வொருவரும்... படிக்க வேண்டிய இந்த புத்தகத்தை இவ்வளவு தற்செயலாகவா... ஆனால், "சார், நீங்க, இதை, நிச்சயம், அவசியம் படிப்பீங்க!" என்று லஷ்மி பிரசாந்த் கொடுத்திருக்க மாட்டார். மாட்டான்... என்று பாசமுடன் எழுதத்தோன்றி, பயோகெமிஸ்ட்ரி, உதவி பேராசிரியர், மற்றும் இவ்வளவு அற்புதமான புத்தகத்தை கொடுத்து... சரியான சமயத்தில்... கண்களை திறந்து... அல்ல அல்ல கண்களை சிமிட்டி... (இது பேச்சு வழக்கு – கோவை வட்டார வழக்கு கண்களை சிமிட்டரான் – என்றால் கண்களை மீண்டும் மீண்டும் இமைத்துக்கொண்டு, கொட்டிக்கொள்ளுதல்... கண்மூடித் திறப்பதை படபடவென செய்வதால்... சிந்தனை தெளிவு ஏற்படுமோ? ...நீங்கள் செய்து பார்ப்பதை நம் மனக்கண்ணில் காணமுடிகின்றது) தெளிவான பார்வையோடு வாழ்வை காணவைத்த வழிகாட்டி, மூலம், வந்துசேர்ந்த புத்தகம் இது. முன்பு கூறிய கணியன் பூங்குன்றனாரின் சங்க இலக்கிய பாடலில், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கின்ற மிகப் பிரபலமான வரிகளில் தொடங்கும் பாடலில் இப்படியான, 'சாதல் – புதிதன்றே' என்கின்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. உலகில் பிறப்புப்போல பழமையானது இறப்பே. தற்காலத்தில் அது குறித்த தெளிவான புரிதல் நம்மிடம் ஏற்பட்டுக் கொண்டு, உள்ளதன் ஒரு அடையாளம் – அதுல் காவண்டேயின் புத்தகம்.

**கெத்தான புத்தகம்:-**

வாழ்க்கையில் பல புத்தகங்களில் பல கிராஃபுகளை பார்த்திருக்கின்றோம்… அந்த வாழ்க்கையையே கிராஃபாக… பக்கங்கள் 25,27 மற்றும் 28 ல் “சிதறிவிழும் செய்திகள்” (Things Fall apart – இதை சிதறிவிழும் பொருட்கள் என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும் ஆனால் நமக்கு… செய்திதானே என்பதால் நாம் இப்படி எழுதி உள்ளோம்) என்கின்ற இரண்டாம் அத்தியாயத்தில் வரைந்து காட்டியுள்ளார் அதில் காவண்டே என்றும் அதிஉன்னதமான அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் வரப்பிரசாதமாக வந்த எழுத்தாளர். இவ்வளவு சூப்பர்லேடிவ் (அளவுக்கு அதிகமான – Superlative) அடைமொழிகளை சேர்த்து எழுதுவதற்கு நியாயங்கள் நிறைய நிறைய இருக்கின்றன. புத்தகத்தை கீழே வைக்க முடியாமல் படித்தபொழுது… (ஏனென்றால் நண்பரின் தந்தையின் மருத்துவ சூழலும் அப்படி) லஷ்மி பிரசாந்திற்கும்… சூழ்நிலைக்கும் நன்றி சொல்ல தோன்றியது. சூழ்நிலை… நேரம்… என்கின்றபோது அதில் படிக்கின்ற நீங்களும் வந்துவிடுவீர்கள்… நமக்கும் நன்றி…

**உதிரும் பூக்கள்:-**

அப்படி என்னதான் இருக்கின்றது என்று கேட்டால்… முழுதாக மொழிபெயர்த்துவிட கூடுமளவு ஆசையிருக்கிறது அவகாசமில்லை. எனவே சிலபல கருத்துக்களை சொல்லி விட்டுவிட மனமில்லை. நாம் அனைவரும் நமது கட்டுரையின் ஆரம்ப அத்தியாயங்களில் மனதுக்குள் நினைத்துவிட்டு மருத்துவர்களின் முடிவுகளை குறித்து… மனக்கலக்கம் கொண்டிருந்தோமில்லையா? (இக்கட்டுரைகளை, எழுதும்போதே வந்து சேரும் விமர்சனங்களை,பின்னூட்டங்களை உட்சேகரம் செய்தே… தொடரப்படுகின்றது) அத்தகைய மருத்துவ சிகிச்சை முறைகள், மருந்தை எடுத்துக்கொள்ளும் மனிதரின்… நோயாளியின்… என்கின்ற இரண்டாவது சொல்லுக்கு பதில்… ‘மனிதரின்’ – என்கின்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது – காரணமாகவே. மலர்கின்ற மலர்கள் உதிர்வது எவ்வளவு இயல்பானதோ… அவ்வளவு சாதாரணமானது மரணித்தல். மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள் அவர் விரும்பிய வண்ணம் இயற்கை எய்தினார். மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும் பொழுது. இப்போது நம் கற்பனை பல்வேறு உதிர்ந்த பூக்களை குறித்து சென்றிருக்கக்கூடும். இயற்கையானதே!

கதைகளிலும் கட்டுரைகளிலும் முத்தாய்ப்புக்கும், கிளைமேக்ஸூக்கும், முடிவுரைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற நாம்… வாழ்வு முடிவு… எப்படி அமைகின்றது

என்பதற்கான தீர்மானமான முடிவுக்கு வரமுடிவதில்லை. அதுவே இயற்கையின் பெரும் புதிர். வாழ்க்கையை நீடிப்பு செய்கின்றோமா? சாவை தள்ளிப் போடுகின்றோமா? என்கின்ற கேள்விக்கான, நிதர்சனமான உண்மையான பதில் பல... நேரங்களில் தெரியவரும்பொழுது கூட... இந்த கேள்வியை குறித்து சிந்திக்க நாம் எல்லோருமே தயங்குகின்றோம். அந்த தயக்கத்தில் இருக்கும்பொழுதே! முன்பு, ஆறு மட்டுமா அழகு? என்று கேட்ட கேள்விக்கான பதிலை பார்த்து விடுவோம். அது அடுத்த பத்தியில்...

**நீரும் அழகு:-**

இரண்டே சொற்களில்... நீரும் அழகு! என்று அந்த முகநூல் பதிவிற்கு பதில் எழுதினோம் நாம். ஆற்றில் ஓடிக்கொண்டிருக்கும், ஆர்ப்பரித்துக் கொண்டு இருக்கும் நீரும், “ஆறுமட்டுமா அழகு?” என்று கேட்டவரும்... சேர்ந்து குறிப்பிடப்படும் வண்ணம் அந்த பதில் அமைந்துபோனது அதுவே நம் கட்டுரைக்கான தலைப்பாகவும் அமைந்துபோனது. வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்நாள் குறைவு. அதற்காக அவற்றின் சிறகுகளில் நிறங்களின் பிரமாண்டத்திற்கும்... அவற்றின்... படபடவென மகிழ்ந்து துள்ளி... வளைந்து ஆடிப் பறக்கும் பரபரப்பு வேகத் தாண்டவத்திற்கும் எந்தக்குறையும் வைக்கவில்லை இயற்கை. அதுபோல வாழ்வின் நீளத்தைக்காட்டிலும் நிறமே முக்கியம். சுருக்கமாக சொல்லப்படும் சொற்கள் ‘சுருக்’ என்று குத்தாமல்... விவாதிக்கப்படும் அல்லது விவரிக்கப்படும் சங்கதிக்கு ‘சுருதி’ சேர்க்க வேண்டும். அறிவுச்செல்வன், மற்றும் அழகுச்செல்வன் இருவருமே அடிக்கடி தொலைபேசியில் அழைத்து காமெடியாக சற்றுநேரம் உரையாடிக் கொள்வார்கள்... “எப்படி சார்... இப்படி... இதையெல்லாம் எழுதி வச்சுக்கணும்”, “அந்த, நோட்டு புத்தகத்தை... மூடி வைத்துவிட்டு நார்மலா பேசுற மாதிரி பேசுங்க... உங்க பேச்சே ஆழ்ந்து சிந்தித்து எழுதி வைத்துவிட்டு ...பிறகு அவசியப் படும்பொழுது... அதைப் பிரித்து படிப்பது போல, உங்கள் பேச்சு இருக்கிறதே?” என்று அழகுச்செல்வன் ஆச்சரியப் படுவார். உதரணத்திற்கு ஒரு ‘பஞ்ச்’ போடுவோம் இங்கே. தொலைபேசியில் அழைத்தோம். அழகுச் செல்வன் எடுத்தார். “தம்பி... பேசலாமா... கூட்டத்தில் எதாவது இருக்கீங்களா? தனியா இருக்கீங்களா?” என்று கேட்டோம். இது மிகவும் முக்கியமான கேள்வி. பலர், கேட்டால், பயன் அளிக்கக்கூடிய கேள்வி... செல்லிடத் தொலைபேசிகள்... தொல்லை ஊசிகளாக மாறுவதை தவிர்க்க உதவும். முன்பு

கண்ட கேள்விக்கு அதற்கு பதிலாக... தனியாக இருக்கிறேன் என்பது வந்த உடனே! இடைவெளியின்றி,

“ஆமாமா, நீ, கூட்டத்தில இருந்தாலும், தனியாதான் இருப்ப” என்று... தம்பியின் தனித்துவத்தை உற்சாகப்படுத்தி, பாராட்டும் வண்ணம் சொற்கள் பயன்படுத்தப்பட்டதை இக்கட்டுரையில் பதிவு செய்து... வாழ்வின் வண்ணங்களை, அந்த சொற்கள் கோபுரத்தின் உயரத்தை வளப்படுத்தவும் உயரச்செய்து வசப்படுத்தவும் கோருகிறோம்.

**முடிவுகளால் முடியாத முடிவுரைகள்:-**

இரமண மஹரிஷி... “உடல் நிலை குறித்து பெரிதாக கவலை கொள்ள தேவையில்லை” என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதை இங்கே நினைவு கூர்கிறோம். சொற்கோ அவர்களுக்கு அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது... அவர் ஆரோக்கியமாக மீண்டும் நடமாடத் துவங்கியுள்ளார். அவரது இயல்பான புன்னகையும், வழிகாட்டுதலும் தொடர்ந்து வான்முகிலின் இலக்கிய குடும்பத்திற்கு கிடைத்துவருகின்றது. மருத்துவ சிகிச்சையில் நோயாளியின் சம்மதத்தை காட்டிலும் அவரது இரத்த சொந்தங்களது சம்மதமே பெறுவது சட்டப்பூர்வ தேவையாக உள்ளது. ஏனென்றால் பல சூழ்நிலைகளில் சிகிச்சை தேவைகளை முடிவு செய்யும்பொழுது நோயாளி சுயநினைவு இல்லாமல் இருப்பதும் உண்டு என்று அறிவுச்செல்வன் சந்தேகங்களை நிவர்த்தி செய்தார். இப்படியாக நமது ஆறும் நீரும் கட்டுரையும் ஒரு தெளிவான முடிவிற்கு கொண்டுவந்துள்ளோம், ஆனாலும்... இந்த கட்டுரையை – ‘ஆனால்’ என்கின்ற வார்த்தையோடு, முடிக்கவே ஆசைப்படுகின்றோம் அதற்கு அனுமதி கோருகின்றோம். ஆச்சரியங்கள் நிறைந்த உலகில்... வாழ்வின் எல்லை எதுவென்பதை இறைவன் புதிராக வைத்துள்ளது பெரிய கவிதை! எந்த வாழ்வும் உண்மையில் முற்றுப் பெறுவதே இல்லை! காலமான சக மனிதர்களது தொலைபேசியிலிருந்து அழைப்பு வரும்பொழுது அவர்களது உறவினர்களோ? நண்பர்களோ? அந்த செய்தியை சொல்லும் பொழுது... நமக்கு மாற்றுக் கற்பனை உருவாகும்பொழுது திடீரென முடிவுரைகள் எழுதப்படுகின்றன. ஆனாலும் அவர்களது எண்ணை – தொலைபேசியிலிருந்து ‘டெலிட்’ செய்ய மனது வருவதில்லை... சடடென டெலிட் செய்ய வாழ்வு என்ன வெறும் எண்ணா? என்ற எண்ணம் வருகின்றது... எதையும் தாங்கும் இணையற்ற இதயம் வேண்டும் என்கின்ற மனது வலிமை குறித்த பொன்மொழி... எவ்வளவு ஒப்பற்றது?

சரி... கட்டுரைக்கு முடிவு வேண்டாமா? என்று நீங்கள்

கேட்பது புரிந்தது…
அதனால் இதோ… முடித்துவிட்டோம்…
ஆனால்…,